திரு. கரு. சீமைச்சாமி : ஸார், இப்போது கட்டியுள்ள காலனி களில் மழைக் காலங்களில் வீடுகள் இடிந்து விடும் என்று பயத் தால் அங்கு குடியேறுவதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, இனி மேல் கட்டப்படும் காலனிகளையாவது நல்லமுறையிலே கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் வழி செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன் ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் இப்படிப் பொதுவாகச் சொல்வதை நான் விரும்பவில்லை. இப்போது நல்ல காலனிகள் எல்லாம் பல கட்டப்பட்டு, அதிலே சந்தோஷமாக மக்கள் குடியிருந்து வருகின்றார்கள். இருந்தாலும், ஏற்கனவே வீடுகள் கட்டப்படுவதற்கு 750 ரூபாய் கொடுக்கப்பட்டது. இதிலே 550 ரூபாய் மத்திய சர்க்கார் மானியமாகவும், 200 ரூபாய் கடனாக வும், கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது வீடுகள் கட்டுவதற்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. இனிமேல் வீடுகள் நல்ல முறையிலே கட்டுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த அறிக்கையிலே இந்த ஆண்டு க்கு நீலகிரிக்கு ரூ. 22,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீலகிரியை பொறுத்தவரையிலே ஹரிஜன நல இலாகாவிலிருந்து ஆதிவாசி களுக்கு வீடு கட்டிக்கொடுப்பது கூட இதிலே சேர்க்கப்பட்டிருக் கிறது என்று நினைக்கிறேன். அப்படியிருக்கும்பொழுது ரூ. 22,500-ல் எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்க முடியும்? இந்தத் தொகையை அதிகரிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே ஜில்லாவாரியாகக் குறிப் பிட்டு இந்தத் தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் இதை அதிகப்படுத்துவது அவசியமானால், அதுபற்றி கவனிக்கப்படும்.

Scooter accident in Mount Road

* 637 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the scooter accident that took place near the Life Insurance Corporation Buildings in Mount Road, Madras, on 10th May 1962, which resulted in fatal injuries to Mr. A. D. Barre, Maintenance Engineer, K.C.P., Ltd., Centre Workshop at Thiruvetriyur and the cause of the accident.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : ரோடுகளுக்கு நடுவே வட்டவடிவமான திட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் இடையூறாக இருப்பது விபத்துகளுக்குக் காரணமாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறதே? அதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விபத்திற்குக் காரணம் அந்த ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு வந்தவருடைய 'எர்ரர் ஆப் ஜட்ஜ்மெண்டு' தான். வேறு ஒன்றும் போக்குவரத்துத் தடை கூட அப்பொழுது அங்கு இல்லை. இவர் சரியாக கவனிக்காததால் இந்த விபத்து ஏற்பட்டது.

---

[a] Printed as Appendix III on page 358.